சென்னை, மார்ச் 15, 2022: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தரமணி டிஎல்எஃப் டௌன்டவுன் அமைவிடத்தில் ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் -ன் உலகளவில் மிகப்பெரிய அலுவலகத்திற்கான அடிக்கல்லை இன்று நாட்டினார். ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் நிறுவனத்திற்காக ஏறக்குறைய ஒரு மில்லியன் சதுரஅடி பரப்பளவில் ஒரு அலுவலக கட்டிட வளாகத்தை டிஎல்எஃப் மற்றும் டிட்கோ இணைந்து கட்டவிருக்கிறது. கோவிட் பெருந்தொற்றுப் பரவல் காலத்திற்குப் பிறகு திறந்த நிலை, அனுபவரீதியான அலுவலகங்களுடன் எதிர்காலத்திற்குரிய பணியமைவிட வளாகமாக முதன்முறையாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது . சென்னை மாநகரில் பெரும் பிசினஸ் நிறுவனங்கள் பெருமளவில் அலுவலகங்களைக் கொண்டு இயங்கி வரும் தரமணியில் டிஎல்எஃப் டௌன்டவுன் சென்னை அமைந்துள்ளது. புதுயுக கட்டிடங்களுடன் பல்வேறு பிளாக்குகளை உள்ளடக்கிய வளாகமாக 27 ஏக்கர் பரப்பளவில் டிஎல்எஃப் டௌன்டவுன் உருவாக்கப்படுகிறது. ரூ.5000 கோடிக்கும் அதிகமான முதலீட்டில் படிப்படியாக இது உருவாக்கப்படும். சென்னையில் இதுவரை இல்லாத உயர்வசதிநிலைகளுடன் உலகத் தரத்திலான அலுவலக கட்டிடங்கள் இடம்பெறும் இந்த நிலைப்புத்தன்மையுள்ள பசுமை வளாகத்தை வடிவமைக்கும் பணியை யுஎஸ் ஸ்ரீ ஐ சேர்ந்த உலகளவில் பிரபலமான, கட்டிடக்கலை நிறுவனமான ஜென்ஸ்லெர் நிறுவனத்திடம் டிஎல்எஃப் ஒப்படைத்திருக்கிறது. உணவகப் பகுதிகள், உணவகங்கள், கஃபேக்கள், நலவாழ்வு மையம், உடற்பயிற்சி நிலையம், குழந்தைகள் காப்பகம் மற்றும் மருத்துவ மையம் உட்பட பல்வேறு வசதிகளுடன் பணியாளர்களுக்கு இனிய சூழலுள்ள அனுபவத்தை தரும் வகையில் ஏறக்குறைய 3.3 மில்லியன் சதுரஅடி பரப்பளவில் புதுயுக அலுவலக கட்டிடம் பேஸ் ஸ்ரீ 1ல் உருவாக்கப்படுகிறது. டிஎல்எஃப் டௌன்டவுன் ஸ்ரீல் அமையவுள்ள ஸ்டான்டர்டு சார்ட்டர்டு ஸ்ரீன் புதிய அலுவலக கட்டிடம் நாம் பணியாற்றும் வழிமுறையையே மாற்றியமைப்பதாக இருக்கும். பாதுகாப்பான மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள சூழலமைப்பில் இந்நாட்டிலேயே முதன்முறையாக ஒரு தனித்துவமான அலுவலக கட்டிட வடிவமைப்பை வழங்குவதன் மூலம், இந்நாட்டில் எதிர்காலத்தில் அமையவுள்ள பணியமைவிடங்களுக்கு ஒரு புதிய தர அளவுகோலை இது நிறுவும். தகுதிவாய்ந்த, திறனுள்ள மற்றும் ஒழுங்கு கட்டுப்பாடு மிக்க பணியாளர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இம்மாநிலத்தில் இருப்பதால் இந்தியாவின் புத்தாக்க மையமாக உருவாக தமிழ்நாடு தயார்நிலையில் இருக்கிறது. ஆளுகை மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு தரவரிசையில் முதலிடம் வகிக்கிறது. மிக அதிக எண்ணிக்கையிலான தொழிலகங்களையும் மற்றும் தொழிலக பணியாளர்களையும் கொண்டிருக்கும் தமிழ்நாடு,




இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பெருமளவு முதலீடு செய்யும் முதன்மை அமைவிடமாக மிக வேகமாக உருவாகி வருகிறது. உற்பத்தி துறையில் 15% என்ற வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை எட்டுவதற்கும் மற்றும் ரூ.10 இலட்சம் கோடி (ஹிஷி$ 137.8 பில்லியன்) மதிப்புள்ள முதலீடுகளை ஈர்க்கவும் “தொழிலக கொள்கை 2021” என்பதை தமிழ்நாடு அரசு வெளியிட்டிருக்கிறது. 2025 ஸ்ரீம் ஆண்டுக்குள் 20 இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு சிறப்பான பணி வாய்ப்புகளை உருவாக்குவதே இதன் இலக்காகும். இந்தியாவில் மட்டுமின்றி, ஆசியா அளவிலும் பெரிதும் விரும்பப்படும் முதல் மூன்று முதலீட்டு அமைவிடங்களுள் ஒன்றாக தமிழ்நாடு இப்போது உருவாகி வருகிறது.

17 ஆண்டுகளுக்கும் அதிகமாக பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதிலும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தால் ஏதுவாக்கப்பட்ட சேவைகளின் ஏற்றுமதிக்குப் பங்களிப்பதிலும் டிஎல்எஃப் தொடர்ந்து முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. இம்மாநிலத்தில் மற்றும் ஒரு மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலத்தை டிஎல்எஃப் நிர்வகிக்கிறது. மணப்பாக்கத்தில் அமைந்துள்ள டிஎல்எஃப் சைபர் சிட்டி, சென்னை என்பது, ஏறக்குறைய 7.2 மில்லியன் சதுரஅடி பரப்புடன் இம்மாநிலத்தில் மிகப்பெரிய ஐடி சிறப்பு பொருளாதார மண்டலமாக திகழ்கிறது. இது நிறுவப்பட்ட நாளிலிருந்து ஏறக்குறைய 84,000 கோடி ரூபாய்க்கு ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயை ஈட்ட இவ்வளாகம் பங்களிப்பு செய்திருக்கிறது. டிஎல்எஃப் ரென்டல் பிசினஸ் - ன் நிர்வாக இயக்குனர் திரு. ஸ்ரீராம் கத்தார், டௌன்டவுன் திட்டத்தின் பேஸ் - 1 தொடங்கப்படுவது குறித்து கூறியதாவது: “டிஎல்எஃப் டௌன்டவுன் திட்டம் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும்போது இம்மாநகரில் ஏறக்குறைய 14 மில்லியன் சதுரஅடி பரப்பளவுள்ள வர்த்தக பணி அமைவிடமாக இருக்கும். குருகிராமுக்குப் பிறகு இரண்டாவது மிகப்பெரிய அமைவிடமாக இது உருவெடுக்கும். ஐடி/ஐடிஇஎஸ், உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறைகளுக்கான உலகளாவிய முன்னணி மையமாக தமிழ்நாடு வேகமாக உருவெடுத்து வரும் நிலையில், இம்மாநிலத்தில் எமது முதலீடு பற்றி நாங்கள் ஆக்கப்பூர்வ நம்பிக்கையோடு இருக்கிறோம். இந்த அமைவிடத்தின் சிறப்பு, டிஎல்எஃப் ஸ்ரீன் சொத்துக்கள் மற்றும் வாடிக்கையாளர் நலனை மையப்படுத்தும் எமது அணுகுமுறை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் டௌன்டவுனில் அலுவலகங்களைக் கொண்டிருக்க பல நிறுவனங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருப்பது குறித்து நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். தரமணி போன்ற அமைவிடத்தில் டிஎல்எஃப் டௌன்டவுன் செயல்திட்டம் உருவாகி முழுமையாக செயல்படத் தொடங்கும்போது 700-750 கோடி வருவாயை வழங்குவதாக இருக்கும். டிஎல்எஃப் ஆஃபிசஸ் - ன் நிர்வாக இயக்குனர் திரு. அமீத் குரோவர், “டிஎல்எஃப் டௌன்டவுன் தரமணி, சென்னையின் ஐடி காரிடார் என அழைக்கப்படும் மிக மையமான பகுதியில் அமைந்திருக்கிறது. மெட்ரோ இரயில் நிலையத்திற்கு நடந்து செல்லும் தூரத்தில் இது அமைவது கூடுதல் சிறப்பு. உயர்நிலை அம்சங்கள் மற்றும் அளவீடுகளோடு வடிவமைக்கப்பட்டிருக்கும் இச்செயல்திட்டத்திற்கு யுஎஸ் க்ரீன் பில்டிங் கவுன்சிலால் பிளாட்டினம் லீட் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. மிக அதிக அளவில் சூரியஒளி நுழைகிறவாறு மேற்கூரையோடு இணைக்கப்பட்ட ஸ்கைலைட் உடன் அமைக்கப்படும் பல்வேறு அடுக்குகளிலான, அழகான முகப்பு அமைவிடத்தை ஸ்டான்டர்டு சார்ட்டர்டு ஜிபிஎஸ் கட்டிடம் கொண்டிருக்கும். நிலைப்புதன்மையுள்ள சூழலில் கலந்து செயல்படுவதற்கான நெகிழ்வுத்திறனுள்ள அமைவிடங்கள் மற்றும் பணியாற்றுவதற்கு உகந்த சூழலை உருவாக்க உதவுகின்ற பிரத்யேக மேல்தளங்களும், முற்றங்களும் இதில் இடம்பெறுகின்றன.” என்று கூறினார். ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் - ன் குளோபல் ஹெட் திரு. மேத்யூ நோரிஸ் கூறியதாவது: “டிஎல்எஃப் டௌன்டவுன் தரமணியில் அமையவிருக்கின்ற உலகளவில் எமது மிகப்பெரிய அலுவலக வளாகமானது, கலப்பின அடிப்படையிலான பணி பாங்குகளைச் சார்ந்ததாக, பணியாளரை மையமாகக் கொண்ட எதிர்காலப் பணியை பொருள் வரையறை செய்யுமென்று நாங்கள் கருதுகிறோம். நிலைப்புத்தன்மையுள்ள நடவடிக்கைகளுடன் சேர்த்து, பணியாளரது நலவாழ்வு, ஆர்வத்துடன் கூடிய ஈடுபாடு மற்றும் உற்பத்தித்திறனை மேலும் மேம்படுத்துவதாக இது இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.” “எமது இந்த தொலைநோக்கு கண்ணோட்டத்தை புரிந்து கொண்டு, நல்ல இணைப்புவசதி மற்றும் நெகிழ்வுத்திறனுள்ள பணியிட வசதியைக் கொண்டிருக்கின்ற ஒரு தனித்துவமான கட்டிட வடிவமைப்பை எங்களுக்கு டிஎல்எஃப் வழங்கியிருக்கிறது. பணியாளரை மையமாக கொண்ட தீர்வாக இத்தொழில்துறையில் இத்திட்டம் இருக்கும். பிறரோடு தொடர்புகொள்ளவும், கலந்துரையாடவும், ஒத்துழைக்கவும் எமது பணியாளர்களை இது மேலும் ஏதுவாக்கும். கூடுதலாக, இதன் வடிவமைப்பு மற்றும் இயக்க செயல்பாடுகளுக்கு குறைவான கார்பன் வெளியீடு என்ற குறிக்கோளையும் இக்கட்டிடம் பூர்த்தி செய்யும்,” என்று அவர் மேலும் கூறினார். இந்நாட்டில், யுஎஸ் க்ரீன் பில்டிங் கவுன்சில் ஒர்க்ஸ்பேசஸால் லீட் பிளாட்டினம் சான்றிதழ் அளிக்கப்பட்ட 33 மில்லியன் சதுரஅடி வர்த்தக / பணி அமைவிடத்தை டிஎல்எஃப் தற்போது கொண்டிருக்கிறது. பணி சார்ந்த பாதுகாப்பில் புதிய தரஅளவுகோல்களை இந்நிறுவனம் நிறுவியிருக்கிறது என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ஒரே ஆண்டில் பிரிட்டிஷ் சேஃப்டி கவுன்சில் 17 விருதுகளை வழங்கியிருப்பது இதற்கு சான்றாகத் திகழ்கிறது. இன்டர்நேஷனல் வெல் பில்டிங் இன்ஸ்டியூட்டின் தரநிலை தேவைப்பாடுகளை டிஎல்எஃப் - ன் அனைத்து வர்த்தக / பணி அமைவிட வளாகங்களும் பூர்த்தி செய்திருப்பதால், வளாக அமைவிட செயல்பாடுகள் மற்றும் மேலாண்மைக்கு கௌரவமிக்க வெல் சுகாதார - பாதுகாப்பு தரவரிசை சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது.




## ப்ரீ-வெட்டிங்கில் புதிய டிரெண்ட்: தமிழக அதிசயங்களில் மனைவியுடன் இணைந்து பாடலை ஷூட் செய்துள்ள திரை உடை அலங்கார நிபுணர் மற்றும் நடிகர் சத்யா





சென்னை, மார்ச் 15, 2022: வெற்றிப்படங்களில் விஜய், சிவகார்த்திகேயன் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்களுடன் பணியாற்றியுள்ள உடை அலங்கார நிபுணர் சத்யா என் ஜே, கனா திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்ததன் மூலம் நடிகராகவும் அறிமுகமானார்.

உடை அலங்காரம் மற்றும் நடிப்பு ஆகிய இரண்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும் சத்யா, திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மற்றும் நடிகர்/நடிகையரின் ஃபோட்டோ ஷீட் மற்றும் வீடியோ ஷூட்டை வடிவமைத்து இயக்கவும் செய்கிறார்.

இன்று திருமண பந்தத்தில் இணைந்துள்ள சத்யா, தனது வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தை புதுமையான முறையில் கொண்டாடும் வகையில் தனது மனைவியான கோகிலாவுடன் இணைந்து தமிழ்நாட்டின் 7 முக்கிய இடங்களில் பாடல் ஒன்றை ஷூட் செய்துள்ளார். தற்போது பிரபலமாகி வரும் ப்ரீ-வெட்டிங் ஷூட்டில் புதிய டிரெண்டை ஏற்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளது.

“ஜீன்ஸ் திரைப்படத்தில் இடம்பெறும் அதிசயம் பாடல் 7 உலக அதிசயங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அதே பாடலை தமிழகத்தின் 7 அதிசயங்களில் ஷீட் செய்துள்ளோம். பாடலை திருமண வரவேற்பு தினத்தன்று வெளியிடவிருப்பதால், மேலும் விவரங்களை இப்போதே சொல்லி சஸ்பென்ஸை உடைக்க விரும்பவில்லை. இந்த பாடல் அனைவராலும் ரசிக்கப்பட்டு பாராட்டப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,” என்றார்.

இப்படாலை படமாக்க மூன்று நாட்கள் ஆனது. இரண்டு கார்களில் குழுவினர் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களுக்கு பயணித்து சிறப்பு வாய்ந்த ‘அதிசயங்களில்’ பாடலை ஷீட் செய்துள்ளனர்.

மேலும், திருமண வரவேற்பன்று இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மணமக்களை போன்று சத்யாவும் கோகிலாவும் தோன்றவுள்ளனர். ஒரு கெட்டப்பில் இருந்து இன்னொரு லுக்கிற்கு மாறுவதற்கு இடைப்பட்ட அவகாசத்தில் அதிசயம் பாடல் விருந்தினர்களுக்கு திரையிடப்படும்.

சத்யா நடித்துள்ள திரைப்படங்கள் தொடர்ந்து திரைக்கு வரவுள்ள நிலையில், உடை அலங்கார நிபுணராகவும் பல்வேறு படங்களில் அவர் பணியாற்றி வருகிறார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
செவ்வாய்க்கிழமை
மார்ச் 15 2022

# தமிழக பள்ளிகளில் சாதியப் பாகுபாடு காட்டப்படுகிறது என்கிற தகவல் தெரிந்தால் உடனடியாக நடவடிக்கை




சென்னை, மார்ச் 15, **2022:** அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் குறித்த விபரப் பதிவேட்டில் அவர்களின் ஜாதி குறித்த கேள்வி கேட்கப்பட்டுள்ளதாக வந்த செய்தியை தமிழக அரசு மறுத்துள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:ஸ்ரீ

அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்விச் சட்டம் நடைமுறைக்கு வந்தது முதலே ஒவ்வோர் ஆண்டும் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை வகுத்தபின் அது குறித்து பள்ளிக் கல்வித் துறைக்கு தொடர்புடைய பள்ளிகள் தகவல் தெரிவிக்கவேண்டும். அதனடிப்படையிலேயே பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்கான நிதி வழங்கப்படும். 2020ஸ்ரீ-21 கல்வியாண்டில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டது குறித்து பள்ளிக் கல்வித் துறைக்கு தகவல் அனுப்பாத பள்ளிகளை விரைந்து அனுப்பவேண்டுமெனக் கோரி பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் முதன்மை கல்வி அலுவலர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

அந்தச் சுற்றறிக்கையில், குழந்தைகள் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர்களா, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களா, பிற்படுத்தப்பட்ட அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களா அல்லது சிறுபான்மையினரா அல்லது முற்பட்ட வகுப்பினரா என்று மட்டுமே கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தையின் சாதியைக் கேட்பதற்கும், அக்குழந்தை சார்ந்த வகுப்பைக் (எஸ்.சி/எஸ்.டி/பி.சி/எம்.பி.சி) கேட்பதற்கும் வேறுபாடு உள்ளது.

பள்ளிகளில் மாணவர்கள் என்ன வகுப்பைச் சார்ந்தவர்கள் என்கிற தகவல் ஏற்கனவே இருக்கிறது. அந்த விவரங்களின் அடிப்படையில்தான், அவர் பட்டியல், பழங்குடியினரா, பிற்படுத்தப்பட்டவரா, முற்படுத்தப்பட்டவரா என்பது முடிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நலத்திட்டங்ளை பயன்படுத்திக்கொள்ள முடியும். இது வெகுகாலமாக பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை.

சாதி கேட்கவில்லை

புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இதை மிக எளிதாக பதிவேற்றம் செய்துவிட முடியும். இதன் மூலம் பணிச்சுமை குறைகிறது. ஒரு மாணவர் பள்ளியில் சேரும்போது ஒரு முறை பதிவு செய்தால் போதும். இவர்கள் சார்ந்த வகுப்புதான் செயலியில் பதிவாகுமே தவிர மாணவர்களின் சாதி எங்குமே சேமிக்கப்படுவதில்லை. விளிம்பு நிலையில் உள்ள மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை உட்பட பல்வேறு சிறப்புத் திட்டங்களுக்கான பலன்கள் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே இந்தத் தகவல் கேட்கப்படுகிறது. பின்னாளில் அவர்கள் இடஒதுக்கீடு மூலம் பலன் பெறவும் இந்த அடிப்படைத் தகவல் தேவைப்படுகிறது.

ஒரு மாணவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பது தான் தமிழக அரசுக்குத் தேவையே தவிர அந்த மாணவரின் சாதி அல்ல. சமூக நீதியின் அடிப்படையில் இயங்கும் தமிழக அரசு தன் நோக்கத்தில் தெளிவாக இருக்கிறது. அந்த சுற்றிக்கையில் சாதி கேட்கப்படாதபோது கேட்டதாக ஒரு பொய்ச் செய்தியை உலவவிடுவது உண்மைக்குப் புறம்பானது. சாதிக்கும் வகுப்புக்கும் வேறுபாடு தெரியாமல் வெளியிடப்பட்டிருக்கிறது அச்செய்தி.

சாதியப் பாகுபாடா? உடனடி நடவடிக்கை

தமிழக பள்ளிகளில் சாதியப் பாகுபாடு காட்டப்படுகிறது என்கிற தகவல் தெரிந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது பள்ளிக் கல்வித் துறை. விளிம்பு நிலையில் உள்ளவர்களின் முன்னேற்றத்திற்கென கேட்கப்படும் விவரங்களை திரித்து மாணவர்களின் சாதியை பள்ளிக் கல்வித் துறை கேட்டது போன்றதொரு தோற்றத்தைத் தர முயல்வது அநீதியானதும். முற்றிலும் பொய்யானதும் தமிழக அரசின் சமூக நீதிக் கொள்கைக்கு முரணானதுமாகும். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்காக மூன்று டிராக்டர்களை வழங்கிய அதானி ஃபவுண்டேஷன்



சென்னை, மார்ச் 15, **2022:** அதானி ஃபவுண்டேஷன், திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை திறம்பட செயல்படுத்த உதவ மூன்று கிராமப் பஞ்சாயத்துகளுக்கு டிராக்டர்களை வழங்கியிருக்கிறது. அதானி துறைமுகம் மற்றும் அதானி ஃபவுண்டேஷனின் உயரதிகாரிகள் மற்றும் மீஞ்சூர் பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவரும், கௌரவ விருந்தினராக இந்நிகழ்வில் பங்கேற்ற திரு. ஜி. ரவி ஆகியோர் முன்னிலையில் பொன்னேரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. துரை சந்திரசேகர் இந்த டிராக்டர்களை வழங்கினார். தங்கால் பெரும்புலம் கிராமபஞ்சாயத்து தலைவர் திரு. ஆர். ஞானவேல், பழவேற்காடு கிராமபஞ்சாயத்து தலைவர் திருமதி. மாலதி சரவணன், கோட்டைக்குப்பம் கிராமபஞ்சாயத்து தலைவர் திரு. கே.சம்பத் ஆகியோர் இந்த டிராக்டர்களை பெற்றுக்கொண்டனர். பழவேற்காடு, கோட்டைக்குப்பம் மற்றும் தங்கால் பெரும்புலம் ஆகிய ஊர்களுக்கான கிராமப் பஞ்சாயத்துகள், சிறிது காலமாகவே ஒரு முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்பை செயல்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வந்தன. இந்த பஞ்சாயத்துகளில் வீட்டுக்கு வீடு சென்று கழிவுகளை சேகரிக்கும் செயல்முறை இல்லாததன் காரணமாக, ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய உவர்நீர் ஏரியான பழவேற்காடு ஏரியானது குப்பைக் கூளங்களை கொட்டும் அமைவிடமாக மாறிவருகிறது. முறைப்படியான கழிவு / குப்பை சேகரிப்பு செயல்முறையை நிறுவவும் மற்றும் குப்பைக் கூளங்களை உரிய நேரத்திற்குள், உரிய முறையில் எடுத்துச் செல்வதற்கும் அதானி ஃபவுண்டேஷன் வழங்கியிருக்கும் இந்த டிராக்டர்கள் உதவும்.

அத்துடன், இந்த பகுதியில் சிறப்பான தூய்மையும், துப்புரவும் பேணப்படுவதையும் இந்நடவடிக்கை உறுதிசெய்யும். இந்த மூன்று கிராமப் பஞ்சாயத்துகளில் வசிக்கும் 7809 குடும்பங்களுக்கு, பெரும் மனநிம்மதியளிக்கும் தீர்வாகவும் இது அமையும். இக்கிராமங்களில் உள்ள வீடுகளிலிருந்தும் மற்றும் சாலைகள் போன்ற பொது இடங்களிலிருந்தும் குப்பைகளையும், கழிவுகளையும் முறையாக சேகரித்து, அவற்றை எடுத்துச் செல்லும் செயல்முறை மீண்டும் இப்பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படும். பழவேற்காடு ஏரியில் கழிவுகள் கொட்டப்படாமல் தவிர்க்க முடியும் என்பதால், அந்த ஏரியின் தூய்மையும் பேணப்படும். திடக்கழிவு மேலாண்மைக்கான இந்த திட்டத்திற்கும் கூடுதலாக, இந்த பஞ்சாயத்துகளின் ஒத்துழைப்போடு கழிவுகளைப் பிரித்து வழங்குதல், துப்புரவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய முக்கிய அம்சங்கள் மீது இங்கு வாழும் சமூகத்தினருக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வை அதிகரிக்கும் நடவடிக்கையையும் அதானி ஃபவுண்டேஷன் குடிமக்களால் முன்னெடுக்கப்படும் பரப்புரை செயல்திட்டத்தின் வழியாக மேற்கொள்ளும். இந்த மூன்று கிராமப் பஞ்சாயத்துகளுக்காக வேறு பல செயல்திட்டங்களையும் அதானி ஃபவுண்டேஷன் தொடங்கவிருக்கிறது. வாழ்வாதாரத்தை வழங்க 5 பிசினஸ் குழுக்களை உருவாக்கி ஆதரவளிப்பது, 600 இளவயது நபர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சியளிப்பது, ஊனமுற்ற நபர்களுக்கு வாழ்வாதாரத்தை நோக்கமாக கொண்ட ஆதரவைத் தருவது, விளையாட்டுத்திடலை உருவாக்குவது ஆகியவை இவற்றுள் உள்ளடங்கும். ஒரு நடமாடும் சுகாதாரப் பராமரிப்பு திட்டம், பல்வேறு கல்வி செயல்திட்டங்கள் மற்றும் அவசரநிலை பதில்வினை செயல்திட்டம் ஆகியவற்றை இப்பஞ்சாயத்துகளில் அதானி ஃபவுண்டேஷன் ஏற்கனவே தொடங்கி நடத்தி வருகிறது.

அதானி ஃபவுண்டேஷனின் பிரதிநிதிகள் இது தொடர்பாக கூறியதாவது: “கழிவு மேலாண்மை என்ற தொடர் பிரச்சனைக்குத் தீர்வுகாண உள்ளூர் நிர்வாக அமைப்புகளோடு இணைந்து செயல்படுவதில் அதானி ஃபவுண்டேஷன் கொண்டிருக்கும் பொறுப்புறுதிக்கு இச்செயல்திட்டம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. சிறப்பான கழிவு மேலாண்மை வழியாக சுற்றுச்சூழல் அமைப்பை நம்மால் பாதுகாக்க முடியும். எங்களது கார்ப்பரேட் சமூக பொறுப்புறுதி (சிஎஸ்ஆர்) செயல்திட்டங்களின் வழியாக இப்பகுதிகளில் உள்ள மக்கள் கௌரவமான வாழ்க்கையை நடத்துவதற்கு உதவ கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகிய நோக்கங்களுக்காக ஆதரவை வழங்குவது எங்களது நோக்கமாகும். இங்கு வாழும் சமூகங்களின் உறுப்பினர்களுக்கு திறனதிகாரம் வழங்க வேண்டும் மற்றும் நீண்டகால நிலைப்புத்தன்மையை உறுதி செய்ய வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு இச்செயல்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய முனைப்புத்திட்டங்கள் வழியாக இந்த கிராமப்பஞ்சாயத்துகளில் வசிக்கும் மக்களுக்கு முழுமையான மேம்பாட்டை வழங்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம் மற்றும் எதிர்பார்க்கிறோம். இதற்காக அடுத்த மூன்றாண்டுகள் காலஅளவில் இந்த நடவடிக்கைகளை செயல்படுத்த ஆர்வம் கொண்டிருக்கின்ற ஈடுபாடுள்ள தன்னார்வலர்களது குழுவை நாங்கள் இதில் ஈடுபடுத்தியிருக்கிறோம்.”

# நான் போட்ட நாற்காலியை எட்டி உதைத்தார் நட்டி ; கர்ணன் சிதம்பரம்

## கழிவுகளை ஏற்றி வந்த 20 லாரிகளை தைரியமாக மடக்கி கேரளாவுக்கே திருப்பி அனுப்பிய கர்ணன் நடிகர்



சென்னை, மார்ச் 15, **2022:** நடிப்பு தாகம் உள்ளவர்களை சினிமா எங்கிருந்தாலும் விட்டுவைக்காது.. உடனே சென்னையை நோக்கி படையெடுக்க வைக்கும். அப்படி நடித்து பெரிய நடிகராகி புகழ்பெற வேண்டும் என்கிற கனவுடன் தினமும் கோலிவுட்டை நோக்கி படை எடுத்து கொண்டிருப்போர் பலர். அவர்கள் மத்தியில், சமூக விழிப்புணர்வு காரியங்களை செய்துவரும் ஒருவர் தானும் சினிமாவில் நடிகனாக மாறி ஓரளவு புகழ் பெற்றால் அதன்மூலம் அந்த விழிப்புணர்வு குறித்த விஷயங்களை மக்களிடம் இன்னும் பரவலாக கொண்டுபோய் சேர்க்க முடியுமே என்கிற எண்ணத்தில் சினிமாவிற்குள் நுழைந்திருக்கிறார் என்றால் அது நிச்சயம் ஆச்சர்யமான விஷயம் தான். அதிசயக்கத்தக்க அந்த மனிதனின் பெயர் சிதம்பரம். அதன் முதல் படியாக கர்ணன், ருத்ர தாண்டவம் படங்களில் ரசிகர்கள் கண்களில் படும்படியான கதாபாத்திரங்களில் நடித்துள்ள சிதம்பரம், வரும் நாட்களில் அவர்களது மனதில் பதியும் நடிகராக மாறுவேன் என்கிறார். தென்காசியை சேர்ந்த சிதம்பரம், என்ஜினீயரிங் படித்துவிட்டு குற்றாலம் பகுதியில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் முக்கிய பொறுப்பில் பணிபுரிந்து வருகிறார் அதேசமயம் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என பல விஷயங்களை முன்னெடுத்து செய்துவரும் சிதம்பரம் தமிழ்நாடு இயற்கை சுற்றுச்சூழல் மேம்பாடு சங்கத்தின் துணைத்தலைவராகவும் இருக்கிறார். அதுமட்டுமல்ல, இவர் தென்காசி கால்பந்து விளையாட்டு சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார்..

சுற்றுச்சூழலில் மிகுந்த அக்கறை காட்டிவரும் சிதம்பரம், கேரளாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு லாரிகளில் கழிவுகளை கொண்டுவந்து கொட்டி செல்லும் அநியாயத்தை எதிர்த்து தனி ஆளாக நின்று 20 லாரிகளை மடக்கி பிடித்து அவற்றை மீண்டும் கேரளாவுக்கே திருப்பி அனுப்பி அதிர வைத்தவர்.. அப்படி இவர் செய்த காரியத்தால் இதையே தொழிலாக செய்து வந்தவர்களின் எதிர்ப்பையும் கொலை மிரட்டலையும் கூட சம்பாதித்துள்ளார்

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் இன்னும் ஆழமாக ஏற்படுத்துவதற்கு சினிமா தான் சரியாக இருக்கும்.. அதிலும் குறிப்பாக ஒரு நடிகனாக மாறி இந்த விஷயங்களை மக்களிடம் கொண்டு செல்லும்போது அது இன்னும் அதிக அளவில் கவனம் பெறும் என்பதாலேயே நடிக்கும் முடிவுக்கு வந்துள்ளார் சிதம்பரம்.

சரியாக அந்த சமயத்தில் தென்காசியில் தனுஷ் நடித்து வந்த கர்ணன் படப்பிடிப்பு நடைபெற்றபோது ஆடிசனில் கலந்து கொண்டார். அதில் தேர்வாகி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த சிதம்பரம், அடுத்ததாக, மோகன் ஜி இயக்கத்தில் வெளியான ருத்ர தாண்டவம் படத்தில், நாயகனின் கார் டிரைவர் கதாபாத்திரத்திலும் நடித்தார்.

“தற்போது 143 என்கிற வெப்சீரிஸில் வில்லனாக ஐந்து எபிசோடுகளில் நடித்துள்ளேன். பல மில்லியன் பார்வைகளை தாண்டி இந்த தொடருக்கு வரவேற்பு கிடைத்துள்ளது. அதேபோல அடுத்ததாக ஹிப் ஹாப் ஆதி நடிக்கும் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளேன். இதை தொடர்ந்து அடுத்ததாக இயக்குனர் ராஜுமுருகன் டைரக்ஷனில் கார்த்தி நடிக்க உள்ள படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறேன்” என்கிறார் சிதம்பரம்.

நடிகராக மாறியது குறித்து சிதம்பரம் கூறும்போது, “கேரளாவிலிருந்து மருத்துவ மற்றும் இறைச்சி கழிவுகளை கொண்டு வந்து தமிழகத்தில் குறிப்பாக தென்காசி போன்ற ஆறுகளும் விளைநிலங்களும் நிறைந்த பகுதியில் கொட்டும்போது அவை நச்சுத்தன்மை அடைந்து மக்களுக்கு பலவித பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதற்காகத்தான் சுற்றுச்சூழல் அமைப்பின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறேன். அதேசமயம் இதை சினிமாவில் ஒரு நடிகனாக இருந்துகொண்டு செய்தால் இதற்கு இன்னும் மிகப்பெரிய அளவில் பலன் கிடைக்கும் என்கிற எண்ணத்தில்தான் நடிகராகவே மாறினேன்” என்கிறார் சிதம்பரம்.

“கர்ணன் படத்தில் போலீஸ் அதிகாரி நட்டி தனுஷின் கிராமத்திற்குள் நுழைந்ததும் உட்கார நாற்காலி கேட்பார்.... அதை ஒருவர் கொண்டுவந்து போட்டதும் அதன்பிறகு அதை எட்டி உதைப்பார் அல்லவா ? அந்த கதாபாத்திரத்தை எனக்கு மாரிசெல்வராஜ் கொடுத்தார். அதில் யோகிபாபுவை மிரட்டும் காட்சியிலும் நடித்தேன்.. ஆனால் நீளம் காரணமாக அதை படத்திலிருந்து நீக்கி விட்டனர். அந்த படத்தில் நடித்ததன் மூலம் தற்போது ஓரளவிற்கு வெளியே தெரிய துவங்கியுள்ளேன்..

படங்களில் நடிப்பதன் மூலம் கிடைக்கும் ஓரளவு வெளிச்சத்தில் எனது சமூக விழிப்புணர்வு பணிகளை இன்னும் சிறப்பாக செய்ய வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்” என்கிற சிதம்பரம், கேஜிஎப் கருடா ராம் போல வில்லன் கதாபாத்திரங்களில் நடிக்கவே ரொம்ப ஆர்வமாக இருக்கிறேன் என்றும் கூறுகிறார்..

அதேபோல தென்காசி பகுதியில் பிரபல மொபைல் நிறுவனம் ஒன்று தங்களது விளம்பரத்திற்காக ஜல்லிக்கட்டு நடத்த திட்டமிட்டு மிகப்பெரிய ஏற்பாடுகளை செய்து வந்தது ஆனால் அப்படி அவர்கள் போட்டி நடத்தும் இடம் ஜல்லிக்கட்டுக்கு ஏற்றதும் அல்ல.. மாடுகளுக்கு பாதுகாப்பானதும் அல்ல.. அதை வேடிக்கை பார்க்கும் மனிதர்களுக்கும் அது ஆபத்தானது என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதை நிறுத்தியவர் சிதம்பரம். இதனால் உள்ளூர்க்காரர்கள் பலரின் கோபத்திற்கும் கூட ஆளானார் சிதம்பரம்.

இயக்குநர்கள் மாரி செல்வராஜ் மற்றும் மோகன் ஜி இருவரும் தங்களது படங்களில் ஜாதி விஷயத்தில் கவனம் செலுத்துவதாக சிலர் கூறுகிறார்கள் சொல்லப்போனால் அது உண்மைதானா என்பதை தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் இருவரின் படங்களில் நடித்தேன் என்று கூட சொல்லாம்.. ஆனால் அவர்கள் எந்த இடத்திலும் ஜாதியை உள்ளே நுழைப்பதில்லை என்பதை நேரடியாகவே பார்த்தேன்..” என்கிறார் முத்தாய்ப்பாக

# மெகா மார்ச் சலுகையுடன் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடும் கல்யாண் ஜூவல்லர்ஸ்!

## 2022, மார்ச் 5 ரூ 22 வரை 50% தள்ளுபடியில் நகைகள் வாங்கலாம்!




சென்னை, மார்ச் 15, **2022:** இந்தியாவின் மிக நம்பகமான, முன்னணி ஜூவல்லரி பிராண்ட்களில் ஒன்றான கல்யாண் ஜூவல்லர்ஸ், நாடு முழுவதுமுள்ள தனது வாடிக்கையாளர்களுக்காக சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு சிறப்பு மெகா மார்ச் சலுகையை அறிவித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, அனைத்து நேர்த்தியான, பல்வேறு வகையான கல்யாண் ஜூவல்லர்ஸ் நகைகளுக்கு சேதாரத்தில் 50% தள்ளுபடியை வழங்குகிறது.

இந்த விழாக்காலத்தை கொண்டாடும் வகையில், கல்யாண் ஜூவல்லர்ஸில் அனைத்து நகைகளையும் வாங்கும் வாடிக்கையாளர்கள் மெகா மார்ச் சலுகை மூலமாக உடனடி சேமிப்பைப் பதிவு செய்ய முடியும். இதற்கு முன்னும் இதற்கு பின்னும் இப்படியொன்று இல்லை எனும்படியான இந்த ஆச்சர்யமான சலுகை கல்யாண் ஜூவல்லர்ஸின் அனைத்து கிளைகளுக்கும், தங்கம் முதல் வைரம் வரை மற்றும் பட்டை தீட்டப்படாதது முதல் மதிப்புமிக்க கற்கள் பதித்த நகைகள் வரை அனைத்திற்கும் இது பொருந்தும். முன்னர் தனது ஷோரூம்களில் தங்க விகிதத்தை தரநிலைக்கு உட்படுத்திய கல்யாண் ஜூவல்லர்ஸ், இந்த தனித்துவமான பிரச்சாரத்தின் மூலமாகத் தனது மேலான வாடிக்கையாளர்கள் அதிகபட்ச பலன்களுடன் நகைகள் வாங்குவதற்கான கூடுதல் வாய்ப்பை வழங்குகிறது. இந்தியா முழுவதுமுள்ள கல்யாண் ஜூவல்லர்ஸ் ஷோரூம்களிலும் 2022, மார்ச் 20 வரை இந்த சலுகை செல்லுபடியாகும்.

இந்த விற்பனை குறித்து கல்யாண் ஜூவல்லர்ஸ் நிர்வாக இயக்குனர் திரு. ரமேஷ் கல்யாணராமன் பேசுகையில், “இந்தியா முழுவதுமுள்ள எங்கள் ஷோரூம்களிலும் அனைத்து நகைகளின் சேதாரத்திலும் 50% தள்ளுபடிக்கு* உத்தரவாதம் தரும் எங்களது பெண்கள் தின சிறப்பு ‘மெகா மார்ச் சலுகை’யை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். விரைவில் திருமண சீசன் வரவுள்ள நிலையில், வாடிக்கையாளர்கள் தாங்கள் வாங்கும் நகைகளின் மதிப்பில் அதிகளவு சலுகைகளைப் பெறுவார்கள் என்று நம்புகிறோம்” என்று தெரிவித்தார்.

கல்யாண் ஜூவல்லர்ஸில் வாங்கும் நகைகள் பிஐஎஸ் ஹால்மார்க் தரம் பெற்றவை, தூய்மைக்கான சோதனைகள் பலவற்றை எதிர்கொண்டவை. தூய்மை, இலவச ஆயுட்கால நகை பராமரிப்பு, நகைகளின் விரிவான தகவல்கள், வெளிப்படையான பரிமாற்றம் ஆகியவற்றுக்கு உறுதியளிக்கும் கல்யாண் ஜூவல்லர்ஸ் 4-நிலை உத்தரவாதச் சான்றிதழையும் ஃபை-பேக் பாலிசிகளையும் வாடிக்கையாளர்கள் பெறுவார்கள். தங்கள் பிராண்ட் மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு மிகச்சிறந்ததை வழங்கும் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியே இந்த சான்றிதழ் ஆகும்.

மிகவும் பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தும் வகையில், தனது பணியாளர்கள், வாடிக்கையாளர்களை விரிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு உட்படுத்துகிறது கல்யாண் ஜூவல்லர்ஸ். இங்கு பின்பற்றப்படும் ‘வீ கேர்’ கோவிட்-19 வழிகாட்டுதல்களின் ஒருபகுதியாக, தனது ஷோரூம்கள் அனைத்திலும் உயர்நிலை பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றி வருகிறது. பாதுகாப்பு நெறிமுறை வழிகாட்டுதல்கள் கடுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த, ஒரு ‘பாதுகாப்பு அளவீட்டு அலுவலரை’யும் நியமித்திருக்கிறது இந்நிறுவனம்.